திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வேலை செய்யவில்லை என்று சொல்கிறார்களா/ (சிரிப்பு) தலைவரவர்களே, திருச்சி மத்திய சிறைச்சாலைக்கு அமைச்சரவர்கள் சமீபத்தில் சென்றிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அங்கே செயல்பட்டு வந்த நூலகம் தற்போது செயல்படவில்லை என்பது உண்மை. எனவே திருச்சி மத்திய சிறைச்சாலையிலே உள்ள நூலகத்தை இனிமேலாவது சிறப்பாக இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIYAR : Already the Library has been functioning very well. Books are being issued to prisoners and the relevant registers are being maintained and, as such, there is no need for fresh functioning of this Library.

கோத்தகிரியில் சப் கோர்ட் அமைத்தல்.

*வினா 12.—திரு கே. உச்சி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் சப்கோர்ட் ஒன்று நிறுவும் திட்டம் ஏதும் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறுவப்படும் ?

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIYAR :

(a) No, Sir.

(b) Does not arise.

திரு கே. உச்சி : தலைவரவர்களே, கோத்தகிரி பகுதியிலுள்ள மக்கள் சுமார் 30 மைல் தூரம் வந்து—பெரும்பகுதி நடக்க வேண்டியிருக்கிறது—குன்னூர் சப்கோர்ட்டுக்கு வரவேண்டியிருக்கிறது. அங்கே ஏராளமான கிராமங்கள் இருப்பதால் கோத்தகிரியில் ஒரு சப்கோர்ட் அமைக்க முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIYAR : This Government have all sympathies for the difficulties enunciated by the hon. Member, but there is, what is called, the Committee on Jurisdiction of Courts which had gone into the question of realignment of jurisdiction of various civil and criminal courts. This Committee of the High Court has not made any recommendation for the constitution of a Sub-Court at Kotagiri. The hon. Member is requested to make representations to the High Court.

[1978 ஆகஸ்ட் 31]

மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

*வினு 13.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைத்திடும் திட்டம் தற்போது எந்த நிலேயில் உள்ளது ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : மாயவரம் நகராட்சி புதை சாக்கடை திட்டத்தின் ஆய்வு களப்பணிகள் முடிவடைந்து, திட்ட உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

திரு என். கிட்டப்பா : தலேவரவர்களே, மாயூரம் நகராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்கு மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? அதோடு, பாதாள சாக்கடைத் திட்டம் எப்போது செயல்படுத்தப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மதிப்பீட்டுத் தொகை ரூ. 235.57 இலட்சம். அரசின் ஆய்வு முடிந்த பிறகு வேலே தொடங்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலேவரவர்களே, இந்த மதிப்பீட்டுத் தொகையில் மாயூரம் நகராட்சியிடம் பங்கு தொகை ஏதாவது கேட்கப்பட்டிருக்கிறதா? அப்படி இருந்தால் மாயூரம் நகராட்சி என்ன பதில் கொடுத்துள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதுமாதிரியான திட்டங்களுக்கு எல். ஐ. சி. யிலிருந்து இரண்டு பங்கும் அரசிடமிருந்து ஒரு பங்கும் பணம் கொடுக்கப்படுகிறது. அந்தப் பணத்தை 30 ஆண்டுக் காலத்தில் திருப்பித் தரவேண்டுமென்று சொல்லி, அதை அந்த நகராட்சி ஏற்றுக் கொண்ட பிறகு தான் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன; அரசும் அனுமதி தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேட்டவலம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல்.

* வினு 14—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் வேட்டவலம் பேரூராட்சிக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் வழங்க திட்டம் வகுத்து இன்னும் முடிவடையாமல் உள்ளதா?